**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 11.02.2026**
**OS. No. 116/2017**
**வழக்கு சாட்சி PW.3–தங்கவேல், த/பெ.சித்தையகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

2) VS எண்டர்பிரைஸஸ் உரிமையாளர் 1ம் வாதி சண்முகாச்சாரியின் நிலம் விற்பனை செய்யுமாறு கேட்டார், அதற்கு 1ம் வாதி தன்னிடம் வேறு நிலம் இல்லாததால் கொடுக்கமாட்டேன் என்று தெரிவித்துவிட்டார். VS எண்டர்பிரைஸசின் உரிமையாளர் தூண்டி தான் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக நான் சொல்வதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை, 1ம் வாதி சண்முகாச்சாரி தான் என்னிடம் தெரிவித்தார். நெடுஞ்சாலை துறையினரை பொறுத்தவரையில் அரசு விதிமுறைகளுக்குட்பட்டுதான் செயல்படுவார்கள் என்றால் சரிதான், இந்த வழக்கில் அவ்வாறு செயல்படவில்லை. நான் எந்த அடிப்படை ஆதாரமும் இல்லாமல் பிரதிவாதிகள் மீது ஒரு தவறான குற்றசாட்டை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சுற்றுசுவருக்கு அப்பாலும், நெடுஞ்சாலை துறைக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றும், பிற்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் அதை அவர்கள் விரிவாக்கம் செய்வார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் அறிவிப்பு கொடுத்தது சம்மந்தமாக நானும் 1ம் வாதியுடன் பிரதிவாதிகள் அலுவலகத்தற்கு சென்றேனா என்றால், சொத்து சம்மந்தமான ஆவணங்களை எடுத்துக்கொண்டு நானும் அவரும் சென்றோம். வாதிகள் தரப்பில் மனுஏதேனும் கொடுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் பிரதிவாதிகள் அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்றும், இந்த வழக்கில் வாதிகள் அவ்வாறு எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) அடிநிலம் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான நிலம் என்றும், வாதிகள் தான் சட்டத்திற்கு புறம்பாக அதில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தான் பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்றும், அதேபோல் சாலை ஓர நிலங்களை பராமரித்து செப்பனிட்டு வருகிறார்கள் என்றும், அதில் தனிநபர்கள் யாரும் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.